Calender :
Miscellaneous :
Preliminary Register : STC 39/2019
Sessions :
Deposition of Witness for : PW-1 Village:
Name : சிங்காரவேலன்
Taluk :
Father's/Husband's Name : ரெங்கநாதன் Age : 46
Nationality : Indian Religion :

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 24/03/2023**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எதிரி சகாயம் மனோஸ்டினை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சின்னராஜா என்ற ஆசிரியர் மூலமாக எனக்கு பழக்கம். மேலும் அவர் ஸ்கூலில் அலுவலக உதவியாளராக பணி செய்து வருவதாலும் அடிக்கடி எனது வீட்டிற்கு வருவதாலும் எனக்கு பழக்கம். எத்தனை முறை அவர் எனது வீட்டிற்கு வந்துள்ளார் என்றால் இரண்டு மூன்று தடவை வீட்டிற்கு வந்துள்ளார். எதிரிக்கும் எனக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் சுமார் 12 வருடங்களாக பழக்கம். எதிரியின் வீட்டிற்கு நான் எத்தனை முறை சென்றுள்ளேன் என்றால் சுமார் 4 அல்லது 5 முறை சென்றுள்ளேன். எனது வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 கி.மீ தூரம் இருக்கும்.

2. என்ன காரணத்திற்காக 4 தடவை எதிரி வீட்டிற்கு சென்றேன் என்றால் எதிரியிடம் பணம் வாங்குவதற்காக சென்றேன். எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு முன்பு எனக்கு அவரை தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். பணம் கொடுப்பதற்கு முன்பு எதிரியின் வீட்டிற்கு சென்றதில்லை என்றால் சரியல்ல. சென்றுள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நாச்சியார் கோவிலில் முட்டை கடை

வைத்துள்ளேன். எனக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் மாதம் சுமார் ரூ.15,000/- வருமானம் வரும். எதிரி என்ன காரணத்திற்காக என்னிடம் பணம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் பிளாட் வாங்க போவதாக கூறினார்.

3. அந்த விவரத்தை கடனுறுதி சீட்டில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கடனுறுதி சீட்டில் என்ன காரணத்திற்காக எதிரி பணம் வாங்கினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் கடனுறுதி சீட்டிலேயே குடும்ப செலவிற்காக என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கும். எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 09/07/2013 ம் தேதி நான் பணம் கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு கேட்டார். எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. கும்பகோணம் இந்தியன் வங்கி மற்றும் நாச்சியார்கோவில் சிட்டி யூனியன் வங்கியில் வங்கி கணக்கு உள்ளது.

4. மேற்படி வங்கி கணக்கு புத்தகங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் சிட்டி யூனியன் வங்கி கணக்கு முடிக்கப்பட்டுவிட்டது. இந்தியன் வங்கி வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்யலாம். எதிரிக்கு பணத்தை எவ்வாறு கொடுத்தேன் என்றால் பணமாகத்தான் கொடுத்தேன். எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் எனது கடையில் வைத்து கொடுத்தேன். கடன் கொடுத்தபோது வேறு யாரும் உடன் இருந்தார்களா என்றால் எதிரியின் மனைவி மற்றும் அன்பு என்பவர் உடன் இருந்தார்.

5. எதிரி காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் ரூ.3,00,000/-க்கு பூர்த்தி செய்துதான் கொடுத்தார். எதிரி எத்தனை காசோலைகள் கொடுத்தார் என்றால் கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கும்போது ஒரு காசோலை கொடுத்தார். அந்த காசோலை வங்கியில் போதிய பணம் இல்லை என்று திரும்பிவிட்டதால் எதிரியும் அவரது மனைவியும் வந்து வருத்தம் தெரிவித்து மீண்டும் ஒரு காசோலையை கொடுத்தார். முதல் காசோலையை

எந்த தேதியில் கொடுத்தார்கள் என்றால் 09/07/2013 ம் தேதி கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தபோதே 10/04/2014 என பின் தேதியிட்டு கொடுத்தார்கள். மேற்படி விவரங்களை எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

6. 09/07/2013 ம் தேதி பணம் பெற்ற பிறகு எத்தனை மாதத்தில் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக கூறினார் என்றால் சுமார் 6 அல்லது 6 மாதங்களில் திருப்பி தருவதாக கூறினார். பு.சா.ஆ.5 உறுதி மொழி கடிதத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி பு.சா.ஆ.5 ஆவணத்தில் 09/07/2013 ம் தேதி வாங்கிய கடனுக்காக பூர்த்தி செய்யப்படாத காசோலை கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. பூர்த்தி செய்து தான் கொடுத்தார். முதல் தடவை காசோலை திருப்பப்பட்ட பிறகு நான் எதிரியை சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவர் பதில் எதுவும் சொல்லவில்லை. அதனால் நான் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன்.

7. எந்த தேதியில் எதிரியை சந்தித்தேன் என்றால் காசோலை திருப்பப்பட்டு 10 நாட்கள் கழித்து சந்தித்தேன். ரூ.3,00,000/-பணத்தை நான் எவ்வாறு தயார் செய்தேன் என்றால் எனது கையில் இருந்தது. வெளியில் இருந்தும் வாங்கினேன். எவ்வளவு பணம் நான் கையில் வைத்திருந்தேன். எவ்வளவு பணம் வெளியில் வாங்கினேன் என்றால் ரூ.1,00,000/- கையில் வைத்திருந்தேன். வெளியில் இருந்து ரூ.2,00,000/- வாங்கினேன். யாரிடமிருந்து ரூ.2,00,000/- பணம் வாங்கினேன் என்று சொல்ல முடியுமா என்றால் அதனை நான் எழுதி வைத்துள்ளேன். பார்த்து தான் சொல்ல முடியும்.

8. எதிரியை தவிர வேறு யாருக்காவது பணம் கொடுத்துள்ளேனா என்றால் சின்னராஜா மற்றும் ராதா ஆகிய இரண்டு நபர்களுக்கு பணம் கொடுத்துள்ளேன். எதிரிக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், எதிரிக்கும், எதிரி மனைவிக்கும் என்னை யாரென்றே தெரியாது என்றாலும், வழக்கு காசோலை எனக்கு கொடுக்கப்பட்ட

காசோலை இல்லை என்றாலும், சின்னராஜா என்பவரும் எதிரியும் ஒன்றாக வேலை செய்து வருவதால் சின்னராஜாவுக்கு கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**